டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.10.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 105 - Madurai | Online Edition

# வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது!

சென்னை, அக்.21

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவான தாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் நேற்று காலை 5.30 மணியளவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (22ஆம் தேதி) காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும் என்றும், நாளை (23ஆம் தேதி) மத்திய வங்கக்கடல் பகுதிகளில் புயலாக வலுப்பெற கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

அதேநேரம் புயலாக வலுப்பெற்று வடமேற்கு திசையில் வடமேற்கு வங்கக்கடலில் ஒடிசா, மேற்கு வங்கம் கடற்கரை பகுதிகளை நோக்கி நகரும் என்றும், புயலால் தமிழ்நாட்டிற்கு பாதிப்பில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல் உருவாகி தமிழ்நாடு கடற்பகுதிகளை விட்டு விலகி வடமேற்கு திசையில் ஒடிசா மேற்குவங்கம் நோக்கி நகர உள்ளது.

மேலும், இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காணரமாக தமிழ் நாட்டில் 2 நாட்கள் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ள வானிலை மையம், இன்று முதல் 2 நாட்கள் தமிழ்நாட்டிற்கு மஞ்சள் எச்சரிக்கை கொடுக்கப்பட்டு உள்ளது. அத்துடன் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 3 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# திருச்சுழி வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு கூட்டப் பயிற்சி (ராபி)

விருதுநகர், அக்.21

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம் வேளாண்மைத் துறையில் விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின்கீழ் 2024-25ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கான கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு கூட்ட (ராபி பருவ காலப்பயிற்சி) கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்கண்ட கிராமங்களில் நடைபெறும்.





| வ.எண் | கிராமம் | பயிற்சி நடைபெறும் நாள் |
|---|---|---|
| 1 | தும்முசின்னம்பட்டி | 22.10.2024 |
| 2 | குலசேகரநல்லூர் | 23.10.2024 |
| 3 | இராஜகோபாலபுரம் | 24.10.2024 |
| 4 | செந்நிலைக்குடி | 25.10.2024 |
| 5 | வேடநத்தம் | 28.10.2024 |
| 6 | தமிழ்பாடி | 05.11.2024 |
| 7 | புல்லாநாயக்கன்பட்டி | 06.11.2024 |

இவ்வாறு வட்டார தொழில்நுட்ப குழு ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரி தேவி தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நானோ உரம் கண்டுபிடிப்புக்கான செயல்முறை காப்புரிமை




கோயம்புத்தூர், அக்.21

சென்னையிலுள்ள காப்புரிமை அலுவலகம், மெதுவாக நைட்ரஜனை வெளியிடும் நானோஉரம் மற்றும் அதன் உற்பத்தி கண்டுபிடிப்புக்கான செயல் முறை காப்புரிமையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இந்த கண்டுபிடிப்பின் காப்புரிமையில் பல்கலைக்கழக விஞ்ஞானி களான எம்.லதா, முனைவர் கே.எஸ். சுப்பிர மணியன் மற்றும் முனைவர் டி.ஜெயசுந்தரர்மிளா ஆகியோர் பங்களித்துள்ளனர்.

நானோ உர கலவைகளை இலைவழி தெளிப்பதில் உள்ள சிக்கலை தீர்க்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முன்னோடியாக இருந்து, நேரிடையாக மண்ணில் இட உகந்த நானோ யூரியா உரத்தை உருவாக்கியுள்ளது.

இந்த கண்டுபிடிப்பில், லிக்னின் சிட்ரிக் அமிலத்துடன் குறுக்கில்–இணைக்கப்பட்ட யூரியா மூலக்கூறுகள் மற்றும் இயற்கை பாலிமர் கைடோசானுடன் இணைக்க ஒரு மேட்ரிக்ஸாக பயன்படுத்தப்பட்டது. இந்த உரத்தின் செயல்பாடு குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், சாதாரண யூரியாவின் நைட்ரஜன் வெளியீடு நான்கு நாட்களுக்குப் பிறகு நிறுத்தப் பட்டது, அதேநேரத்தில் 33% நைட்ரஜன் உள்ளடக்கம் கொண்டு உருவாக்கப்பட்ட புதிய நானோ யூரியா மண்ணில் 30 முதல் 35 நாட்கள் வரை நீடித்த வெளியீட்டை உறுதி செய்தது.

இத்தகைய நீடித்த ஊட்டச்சத்துக்கள் வெளியீட்டானது, சுற்றுச்சூழலுக்கான ஊட்டச்சத்து இழப்பைக் குறைப்பதுடன், மேம்படுத்தப்பட்ட நைட்ரஜன் பயன்பாட்டுத் திறனுக்கும் பங்களிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நொச்சி மற்றும் ஆடாதொடா போன்ற பூச்சி விரட்டிகளை வயல் வரப்புகளில் பயிரிட வேண்டும் என அறிவுறுத்தல்

அரியலூர், அக்.21

அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி வெளியிட்ட செய்தி குறிப்பில், நொச்சி மற்றும் ஆடாதொடா போன்ற பூச்சி விரட்டிகளை வயல் வரப்புகளில் பயிரிட வேண்டும் என அறிவுறுத்துகிறார். ஆடாதொடா இலைகள் கசப்புத் தன்மையுடன் இருக்கும். இதனால் இதை ஆடுகள் உண்ணாது. நம் முன்னோர்கள் வீட்டு கொல்லையிலேயே வைத்திய சாலையை அமைத்திடும் வகையில் நொச்சி, ஆடாதொடா மற்றும் வேப்பங்கன்றுகளை வளர்த்து வந்தனர். இவற்றில் இருந்து இயற்கை முறையில் தாவர பூச்சி விரட்டிகள் தயாரித்து பூச்சிகளை கட்டுபடுத்தி, சுற்றுசூழலை பாதுகாத்து குறைந்த செலவில் அதிக லாபம் பெற்று வந்தனர். தற்பொழுதும் இதனை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக முதலமைச்சரின் முன்னோடி திட்டமான மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற திட்டத்தின் முழு மானிய விலையில் அரியலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் 15000 எண்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது.

மேலும் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 50 எண்கள் வரை வாங்கி கொள்ளலாம். எனவே தேவைப்படும் விவசாயிகள் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி கன்றுகளை பெற்றுக் கொண்டு நடவு செய்து பயன்பெறுமாறு அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டு கொண்டுள்ளார்.



ஆடாதொடா



நொச்சி

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 21.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 52 |
| 2 | வெண்டை | 50 | 55 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 40 | 44 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 32 | 36 | 60 | கேரட் | 40 | 44 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 86 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 44 | 48 |
| 6 | புடலை | 40 | 46 | 62 | நூல்கோல் | 32 | 38 |
| 7 | பீர்க்கன் | 45 | 48 | 63 | டர்னிப் | 32 | 38 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 45 | 48 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 305 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 55 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 38 | 42 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 64 | 71 | பென்னி பீன்ஸ் | 140 | 158 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 50 | 58 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 58 | 64 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 85 | 95 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 45 | 50 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 18 | 20 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 40 | 44 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 28 | 32 | | | | |

# நெல் விதைகளை சரியான ஈரப்பதத்தில் சேமிக்க வேண்டும்!

திருச்சி, அக்.21

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்பொழுது குறுவையில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்களில் அறுவடை பணி நடந்து வருகிறது. மேலும் சம்பா பட்டத்திற்கான நெல் நடவு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது பெய்து வரும் பருவமழையால் அறுவடை செய்யப்பட்ட நெல் விதைகளை சரியான ஈரப்பதத்தில் சேமித்து வைக்க வேண்டுமென திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் தெரிவித்துள்ளார்.

தரமான விதையானது, இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட் விதைச்சான்றளிப்பு தரத்திற்கு ஏற்ற குறைந்தபட்ச முளைப்புத் திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, நிர்ணயிக்கப்பட்ட ஈரப் பதம் மற்றும் விதை நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும். அதிகப்படியான விதைகள் தேவையான தருணத்திற் காகவும், ஆதார விதைகளாகவும், மரபியல் தொகுப்பு விதை களாகவும், சேமித்து வைக்கப்படுகின்றன.

பொதுவாக உற்பத்தி ஆகும் விதைகளில் 20 முதல் 25 சதவீதம் அடுத்த பருவத்திற்காக சேமிக்கப்படுகிறது. அறு வடைக்கு பின் நெல் விதைகளை சுத்தம் செய்து, நன்றாக உலர்த்தி ஈரப்பதம் 8 முதல் 10 சதவீத அளவிற்கு குறைக்க வேண்டும். தானிய மூட்டைகளை தரையில் வைக்காது கட்டைகள் மற்றும் மூங்கில் பாய்களின் மீது அடுக்க வேண்டும். அவ்வாறு அடுக்கப்படும் மூட்டைகளை சுவற்றை ஒட்டி அடுக்காமல் தனித்தனியாக அடுக்கடுக்காக நல்ல இடைவெளி விட்டு காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

தானிய சேமிப்புக்கு பயன்படுத்தப்படும் சாக்கு பைகள் புதியதாக அல்லது பூச்சி அற்றதாக இருக்க வேண்டும். இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி ஒவ்வொரு பயிருக்கும் ஈரப்பதம் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. நெற்பயிருக்கு ஈரப்பதம் 13 சதவீதம், சோளம், மக்காச்சோளம், கம்பு மற்றும் ராகி 12 சதவீதம், பயிறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுக்கு 9 சதவீதம் இருத்தல் வேண்டும். விதை பரிசோதனை செய்யும் போது அதன் புறத்தூய்மை, ஈரப்

பதம், பிற ரக கலப்பு மற்றும் முளைப்புத்திறன் பரிசோதனை செய்யப்படுகிறது.

அறுவடைக்கு பின் நெல்லை காய வைத்து,சுத்தம் செய்து சரியான ஈரப்பதத்தில் சேமித்து வைக்கும் போது விதையின் தரம் குறையாமலும், சேமித்து வைக்கும் காலத்தில் பூச்சி மற்றும் பூஞ்சானநோய் தாக்குதலில் இருந்து விதையை பாதுகாக்க லாம். இவ்வாறு, சேமித்து வைக்கப்படும் விதையின் ஆயுள் கூடும். தரமான விதைகளை பயன்படுத்தும் போது விதை களின் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு நல்ல வீரியமான நாற்றுகளும் போதிய பயிர் எண்ணிக்கையும் பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் பெறலாம். எனவே விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதத்தை அறிய ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு அலுவலக வளாக கீழ்தளம், புத்தூர் 4 ரோடு, திருச்சி -17 ல் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி, பரிசோதனைக் கட்டண மாக ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- மட்டுமே செலுத்தி, பரிசோதனை விபரங்களை பெறலாம்.

தரமான விதைகளைப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெற்றிடு மாறு, திருச்சி விதைப்பரிசோதனை நிலைய, விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி. அனிதா மற்றும் ரெ.ரமாபிரபா நளினி ஆகியோர் தெரிவித்தனர்.



# பணம் இல்லா பரிவர்த்தனை மூலம் வேளாண் இடு பொருட்களை பெறலாம்

சேலம், அக்.21

மின்னனு பரிவர்த்தனை மூலம் வேளாண் இடுபொருட்களை விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் விற்பனை முனைய கருவி வாயிலாக வாங்கி பயன் பெறலாம்.

மின்னனு பரிவர்த்தனை தற்பொழுது நாடு முழுவதும் பரவலாக் கப்பட்டிருக்கிற இந்நிலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் தற்பொழுது POS இயந்திரங்கள் நிறுவப்பட்டு உள்ளன. இதன் மூலம் விவசாயிகள் மானிய விலையில் கிடைக்கும் வேளாண் இடுபொருட்களை வாங்கும் போது பணம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், மின்னனு வழியில் பணம் செலுத்துவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய மின்னனு பணம் செலுத்தும் முறைகள்**

Google Pay, Phonepe, BHIM, PayTM UPI செயலிகளை பயன் படுத்தி பணம் செலுத்தலாம்.

**கிரெடிட் மற்றும் டெபிட் கார்டு**

கிரெடிட் மற்றும் டெபிட் கார்டு மூலம் நேரடியாக POS இயந்திரத்தில் செலுத்தலாம்.

**கிசான் கிரெடிட் கார்டு**

விவசாயிகள் தங்கள் KCC கார்டுகளைப் பயன்படுத்தி பணம் செலுத்தலாம்.

**முக்கிய அம்சங்கள்**

விவசாயிகள் பணம் எடுத்துச் செல்ல வேண்டிய சிரமத்திலிருந்து விடுபடுவார்கள். மின்னனு பணம் செலுத்துதல் முறைகள் மூலம் பாதுகாப்பான, விரைவான பரிவர்த்தனைகள் மற்றும் வங்கி கணக்குகள் மூலம் நேரடி பணம் பரிமாற்றம் மூலம் எந்தவித குறைகள் அல்லது பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பதிவுகள் இருக்கும். இத்தகைய புதிய வசதி மூலம் விவசாயிகள் தங்கள் தேவையான இடுபொருட்களை எளிமையாக, விரைவாக வாங்கிக் கொள்ளலாம்.

இச்சேவையினை பயன்படுத்தி கொள்ள சேலம் மாவட்டம், மேச்சேரி, வேளாண்மை உதவி இயக்குனர் எஸ்.ஷீரின் கேட்டுக் கொண்டார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்காச்சோளபடைப் புழுவினை கட்டுப்படுத்தும் முறைகள்

விருதுநகர், அக்.21

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் நடப்பு ஆண்டு மக்காச்சோளம் பயிர் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மக்காச்சோளப்பயிரில் படைப்புழுவின் தாக்குதலை தவிர்த்திட ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இது குறித்து சிவகாசி, வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, சிவகாசி வட்டாரத்தில் நடப்பு ஆண்டு மக்காச் சோளம் பயிர் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொது வாக மக்காச்சோள படைப்புழுவானது பிந்தைய பருவத்தில் சாகுபடி செய்யும் மக்காச்சோள பயிரில் அதிகம் காணப்படும். மேலும் தற்போதைய காலநிலை மற்றும் பயிரின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் படைப்புழு பெருக்கத்திற்கு சாதகமாக இருப்பதால் கீழ்கண்டவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

- மக்காச்சோள வயலின் வரப்பு ஓரங்களில் தீவனச் சோள பயிரினை ஒரு மீட்டர் அகலத்திற்கு விதைப்பு செய்தால் படைப்புழு தாய்ப்பூச்சிகளின் இடப்பெயர்ச்சியினை தடுக்கலாம்.

- வரப்பு ஓரங்களில் சூரியகாந்தி, எள், தட்டைப்பயறு போன்ற பயிர்களை விதைப்பதன் மூலம் படைப்புழுவின் தாக்கம் மக்காச்சோள பயிருக்கு செல்லமால் தடுக்கலாம்.

- ஒரு ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகள் வைப்பதன் மூலம் படைப்புழுவின் ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

- இளம்பயிரில் படைப்புழு தென்பட்டால் அசாடிராக்டின் எனும் வேப்பம் எண்ணெய் மருந்தினை ஒரு ஏக்கருக்கு 1 லிட்டர் அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு காரணியான மெட்டாரைசியம் அனிசோபிலே எனும் மருந்தினை 1 கிலோ அளவில் கலந்து பயிரில் தெளிக்கலாம்.

- மக்காச்சோள பயிரில் படைப்புழு தாக்குதல் அதிமாக இருக்கும் பட்சத்தில் எமாமெக்டின் பென்சோயேட் (5% SG)

ஏக்கருக்கு 100 கிராம் அல்லது குளோரோன்டிரானிபுரோல் (18.5% SC) 60 மி.லி அல்லது நாவலூரான் (10% EC) 300 மி.லி அல்லது ஸ்பின்னட்டோரம் (11.7% SC) 100 மி.லி ஆகிய பூச்சி கொல்லிகளில் ஏதேனும் ஒன்றினை தெளித்து கட்டுப் படுத்தலாம்.

ஒரே மருந்தினை திரும்ப திரும்ப பயன்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பயிர் நோய்களைக் கட்டுப்படுத்தும் உயிரியல் பூஞ்சான கொல்லிகள்

நமது மண்ணில் கோடிக்கணக்கான வகையில் நுண்ணுயிர்கள் உள்ளன. இவற்றில் பல வகை நுண்ணுயிரிகள் (MICRO ORGANISM) பயிர்களை காக்கும் அற்புத பணிகளை செய்கின்றன. அதாவது நோய்களை பரப்பும் உயிரிகள் மீது தாக்குதல் நடத்தி, பயிர்களை செழிப்பாக வளர உதவுகின்றன. முன்பெல்லாம் விவசாயிகள் கால்நடை வளர்த்து அதனுடைய சாண குவியலை நிலத்தில் இட்டனர். அப்போது இந்த பூசணங்கள் மண்ணில் செழிப்பாக வளர்ந்தன. இன்றைய சூழ்நிலையில் இவற்றை நிலத்தில் பெருக்கிட நாம் வாங்கி நிலத்திலே இடவேண்டும். எந்தெந்த நுண்ணுயிரிகள் என்னென்ன வகைகளில் செயல்படுகின்றன என்பதை அறிவோமா?

**1) சூடோமோனாஸ்**

இது ஒரு பாக்டீரியா வகை நுண்ணுயிரி. பயிருக்கு பாதுகாப்பு அளித்து நோய்களை கட்டுப்படுத்த வல்லவை கொண்டவை. இது மிக முக்கியமான நோய்களான வேரழுகல், தண்டு அழுகல், இலைக்கருகல் போன்ற நோய்களை கட்டுபடுத்துவதுடன் விதை நேர்த்தி மருந்தாக (ஒரு கிலோ விதைக்கு 10 கிராம்) என்றளவில் பயன்படுத்தலாம். இது தவிர ஆக்ஸின், ஜிப்ரலின் போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கி (PLANT HORMONES) யை பயிர்களுக்கு அளிக்கவல்லது. இவற்றை பயிர் மீது தெளிக்கவும், மக்கிய சாண குப்பைகளில் கலந்து நிலத்தில் இடவும் பயன்படுத்தபடுகிறது, இது திரவ திட நிலைகளில் கிடைக்கிறது. தற்போது சூடாமானாஸ் பதிலாக பேசில்லஸ் சப்டிலிஸ் பயன்படுத்தப்படுகிறது.

**2) டிரைக்கோடெர்மா விரிடி**

இது டி.விரிடி என்றும் அழைக்கப்படுகின்றது. மண்ணில் உருவாகும் பயிர் நோய்களை கட்டுப்படுத்தும் ஓட்டுண்ணி பூசனமாகும். இது எதிர் உயிர் பூஞ்சானமாகும். இதை விதை நேர்த்தி யாகவும் பயன்படுத்தபடுகிறது. ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்றளவில் விதை மூலமாக பரவும் நோயை கட்டுப் படுத்தப்படுகிறது.

பயிர் வளரும் போது வேரைச்சுற்றி பாதுகாப்பு கவசமாக இருந்து பயிர்களை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்த உதவுகின்றன வேர் அழுகல் வாடல் நாற்று அழுகல் போன்ற நோய்களில் இருந்து பயிர்களைகாக்கிறது.

இதனை விதையுடன் கலந்து விதை நேர்த்தியாகவும் பயன் படுத்தலாம், நாற்றில் நனைத்து நடலாம், இலைமீது தெளிக்கலாம். இது திட திரவ நிலையில் உள்ளது.

இது அனைத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் முழு விலையிலோ அல்லது மானிய விலையிலோ வாங்கிடலாம். இரசாயன பயன்பாட்டை பயிர்களின் மீது தெளிப்பதை தவிர்க்க இது பயன்படுத்தப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

Stanes

காலநிலை மாற்றத்தைத் தாங்கி
**பயிரின் இலைகள் பசுமையாகவும்**
**செழிப்பாகவும் வளர... பயன்படுத்துவீர் !..**

**கிரீன் மிராக்கிள் (GREEN MIRACLE)**

கிரீன் மிராக்கிள் **பயிரை வெப்பத்திலிருந்து காத்து**, கூடுதல் வளர்ச்சி மற்றும் மகசூலைத் தரக்கூடியது

இது **இலையின் மேல் படலமாக உருவாகி, சூரியஒளி வெப்பத்தை இலையில் அதிகமாவதை தடுக்கிறது**

அதனால் இலைவழி நீர் **ஆவியாகி விரயமாவதைக்** கட்டுப்படுத்துகிறது

**பயன்படுத்தும் முறை**

**3 மில்லி** கிரீன் மிராக்கிளை
1 லிட்டர் தண்ணீரில் கலந்து
தெளிக்க வேண்டும்




84899 04949, 84899 10105

>>> மேலும் விபரங்களுக்கு: www.tstanes.com

# விதை முதல் விளைச்சல் வரை விவசாயப் பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்த ஒரு பிரத்தியேக இணையதளம்




உழவர்கள் தங்கள் வேளாண் விளைப் பொருட்களை நுகர்வோர்க்கு நேரடியாக சந்தைப்படுத்தவும், வேளாண் சார்ந்த நிறுவனங்கள் தங்கள் தொழில்நுட்பத் தயாரிப்புகளை விவசாயிகளுக்கு நேர டியாக சந்தைபடுத்தவும் மிக எளிமையாக கைய–ாளக் கூடிய இணையதளத்தை பாரத் அக்ரி மார்ட் என்ற நிறுவனம் அறிமுகம் செய்து உள்ளது. இந்த ஆன்லைன் சந்தையை www.farmway.in என்ற இணைய முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

தற்பொழுது நடைமுறையில் விவசாயிகள்/தரகர்கள்/சிறு குறு வேளாண் தொழில் நிறுவனங்கள், தங்களின் விளைபொருட்கள்/ தயாரிப்புகளை WhatsApp குழுக்கள் வாயிலாக சந்தைபடுத்தி வருகிறார்கள். இதில் சிக்கல் என்னவென்றால், ஒரு விவசாய குழுவில் பதிவிடப்படும் விற்பனை பதிவு மற்றொரு விவசாய குழுவிற்கு சென்றடைவதில்லை. ஒரு குழுவில் உள்ள சுமார் 200 விவசாயிகள் மட்டுமே செய்தியை பார்க்கிறார்கள். ஒரு விவசாயி ஒன்றிற்கும் மேற்பட்ட விவசாய/நுகர்வோர் குழுவில் இணைந்தால், WhatsAppல் தேவையற்ற பதிவுகள், படங்கள் நிரம்பி வழிவதுடன், மொபைலின் ஸ்டோரேஜ் திறனை குறைத்து விடுகிறது. மேலும், ஒரு விவசாயி, தனக்கு தேவைப்படும் பொழுதுமற்றொரு விவசாயி பதிந்த விற்பனைப் பதிவை பார்க்கவோ தேடவோ முடிவதில்லை. இதனால், விளைப்பொருட்களுக்கான சந்தையின் எல்லை சுருக்க பட்டு விளைப்பொருள் அநேக நுகர்வோரை சென்றடைவதில்லை. இதுபோன்ற நடைமுறை சிக்கல்களை தீர்க்கவும், வேளாண் விளைபொருட்கள்/தயாரிப்புகளை மட்டும் விற்பனை செய்வதற் காகவே, FARMWAY என்ற இணையத்தை கோவையை சேர்ந்த சரண்யா, புவனேஸ்வரி என்ற இரு வேளாண் பட்டதாரிகள் தொடங்கி உள்ளனர்.

விவசாயிகள் மட்டுமின்றி சிறு, குறு வேளாண் நிறுவனங்கள் தங்கள் வேளாண் சார்ந்த பொருட்களை சந்தைப்படுத்தலாம். இப்பொழுது, தொழில்நுட்பத்தில் அடுத்த கட்டத்திற்கு விவசாயம் சென்று கொண்டிருக்கிறது. ட்ரோன், ஏஜ தொழில்நுட்பத்தில் விவ சாயம் சார்ந்த நிறுவனங்கள் தங்கள் தொழிநுட்பத்தை காட்சி படுத்தலாம். பாரம்பரிய நெல், அரிசி ரகங்கள், நஞ்சில்லா இயற்கை விளைப்பொருட்கள், பழங்கள், காய்கறிகள், மீன்குஞ்சுகள், பட்டுப்

பூச்சி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்றவற்றுடன் ஆடு, மாடு, கோழி போன்ற பண்ணை விலங்குகளை சந்தைப்படுத்த, டிராக்டர், பவர் டில்லர் போன்ற பண்ணை இயந்திரங்களை வாடகைக்கு விட, பயன் படுத்திய பழைய பண்ணை கருவிகளை விற்க/வாங்க பயன் படுத்தலாம். வேளாண் ஆலோசகர்கள், கால்நடை மருத்துவர்கள் தங்கள் சேவையை இவ்விணையதளத்தில் பதிவு செய்வதன் மூலம் அநேக விவசாயிகளை சென்றடையலாம். விவசாயிகள், நுகர்வோர் தங்களுக்கு வேண்டிய/கிடைக்காத அரிய வேளாண் சார்ந்த பொருட்களை FARMWAYல் கேட்டால் அது வைத்திருப்பவரிடம் தெரியப்படுத்தி, தேடுபவரையும் வைத்திருப்போரையும் FARMWAY இணைக்கிறது. வேளாண்மையில் மிகப்பெரிய சவாலாக இருப்பது விவசாயப் பணியாளர்கள் வேலைக்கு கிடைப்பது. விவசாயி தன் தோட்டப் பணி விபரம், கூலி, இடம், தேவைப்படும்வேலையாட்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை பதிவிட்டு பணியாளர்களைத் தேடலாம். விவசாயப் பணியாளர்களை குழுவாக பணியமர்த்தும் அவுட்சோர்சிங் நிறுவனங்கள் தங்கள் விவரங்களை பதிவிடலாம்.

விவசாயிகள் தங்கள் விளைப்பொருளுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்து சந்தைபடுத்த வேளாண்மைக்கென்றே பிரத்தி யேக இணையதளத்தை பார்மவே உருவாக்கியுள்ள து. விவசாயி களை, ‘உற்பத்தியாளர்’ என்ற நிலையில் மட்டும் வைக்காமல் ‘வணிகர்’ என்ற நிலைக்கும் மாற்றம் செய்ய முன்னெடுக்கும் ஒருபரிட்சாட்ர முயற்சி. சமீபகாலமாக நுகர்வோர் மத்தியில், பூச்சி மருந்து தெளிக்காத, நஞ்சில்லாத வேளாண் பொருட்களின் மீது ஆர்வம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. மக்களின் இந்த ஆர்வத்தை தவறாக பயன்படுத்தி ரசாயன உரங்கள் & மருந்துகளை கொண்டு விளைவித்த சாதாரண வேளாண் பொருட்களை‘ ஆர்கானிக்’ என்று சொல்லி சிலர் வி ற்பனை செய்கின்றனர். இதனால் உண்மையாக மத்திய, மாநில வேளாண் துறை கண்காணிப்பில் இயற்கை முறை யில் வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விலை கிடைப்பதில்லை. எனவே மத்திய அரசு நிறுவனமான APEDA வழிகாட்டுதலின் கீழ் சான்று பெற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயில் பெருக்கம், மண்வளம் போன்ற சமூக சிந்தனையோடு செயல்படும் விவசாயிகளுக்கு உரிய மதிப்பளித்து, அவர்களின் விளை பொருட்களை பார்மவேல் சந்தை படுத்த முன்னுரிமை அளிக்கிறது.

மேலும் விவசாயிகள் / சிறு, குறு வேளாண் நிறுவனங்கள் தங்களின் WhatsApp, Facebook, Insta, YouTube, Website போன்ற சமூக வலைதள முகவரிகளை உள்ளீடு செய்தும், பண்ணை / நிறுவன செயல்பாடுகளை நுகர்வோருக்கு தெரியப்படுத்தலாம். இவ்விணையத்தளத்தை www.farmway.in முகவரியில் பார்க்கலாம். WhatsApp எண் 93638 94771ல் தொடர்பு கொள்ளலாம்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# ம.ரெட்டியபபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் மின்னனு பண பரிவர்த்தனையில் இடுபொருட்கள் விநியோகம்

விருதுநகர், அக்.21

சம்பா மற்றும் ராபி பருவத்திற்கு தேவையான விதைகள், நுண்ணூட்ட கலவைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் ம.ரெட்டியபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கபட்டு விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டம், ம.ரெட்டியபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில், விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இடுபொருட்களை ஏ.டி.எம் கார்டு, கூகுள் பே உள்ளிட்ட பணம் இல்லா மின்னனு பரிவர்த்தனை மூலம் அரசு கணக்கில் செலுத்தி இடுபொருட்கள் பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான கருவி ம.ரெட்டியபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் இடுபொருட்களை வாங்க வரும் விவசாயிகள் இடுபொருட்களுக்கான முழு தொகை அல்லது பங்களிப்பு தொகையினை மின்னனு பரிவர்த்தனை மூலமாக செலுத்தி வேளாண் இடுபொருட்களை பெற்று பயனடையலாம். இந்த தகவலை திருச்சுழி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரி தேவி தெரிவித்தார்.

# நிலக்கடலைப் பயிரில் பண்ணைப்பள்ளி பயிற்சி

விருதுநகர், அக்.21

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம் வேளாண்மைத் துறையில் விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ் 2024-25ம் ஆண்டில் விவசாயிகளுக்கான நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி குல்லம்பட்டி கிராமத்தில் ஜெயராமன் வயலில் செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டுள்ளது. 19.10.24 அன்று நடைபெற்ற பண்ணைப் பள்ளி பயிற்சியில் திருச்சுழி வட்டார வட்டார தொழில்நுட்பகுழு ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரி தேவி தலைமையேற்று மண்பரிசோதனை மற்றும் கோடை உழவு செய்வதன் அவசியம் குறித்து பேசினார். சந்திரசேகர், வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் நிலக்கடலை பயிரில் விதை நேர்த்தி செய்வதன் அவசியம் மற்றும் ஜிப்சம் இடுதல் பயன்கள் குறித்து எடுத்து கூறினார். சத்தியன், உதவி பேரசிரியர், நிலக்கடலை பயிரில் சிவப்பு கம்பளி புழு கட்டுப்படுத்தும் முறைகள், இனகவர்ச்சி பொறி பயன்பாடு குறித்து எடுத்து கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை இரா.பிரேமா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் க.முத்துராஜ், உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பழக்கன்று, தென்னங்கன்று மற்றும் காய்கறி நாற்று விற்பனை செய்பவர்கள் உரிமம் பெற்றிருக்க வேண்டும்

இராமநாதபுரம், அக்.21

தமிழ்நாட்டில் பழச்செடிகள், தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்பவர்கள் விற்பனை உரிமம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு செயலாக்க ஆணை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் இப்ராம்சா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

**விற்பனை உரிமம்**

இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் காய்கறி நாற்றுகள், பழச்செடிகள், தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்பவர்கள் விற்பனை உரிமம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். பழமரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால் உரிமையாளர் எந்த விதையின் மூலம் அல்லது ஒட்டு மூலம் உற்பத்தி செய்கிறார் என்ற தகவலை கட்டாயம் பராமரிக்க வேண்டும். மேலும் அதன் விவரத்தினை ஒவ்வொரு பழமரக் கன்றுடன் உண்மை தன்மை அட்டை பொருத்துதல் மூலம் உறுதி செய்ய வேண்டும். நர்சரி உரிமையாளர் அனைத்து கன்றுகளுக்கும் உண்மை தன்மை அட்டை பொருத்தி இருப்பதை விற்பனைக்கு முன்பு உறுதி செய்ய வேண்டும். உண்மை தன்மை அட்டையில் நாற்றங்கால் உரிமையாளரின் கையொப்பத்துடன் முத்திரை எண், பயிரின் பெயர், ரகத்தின் பெயர், பதியம் செய்த நாள், குவியல் எண், நாற்றங்காலின் பெயர் மற்றும் முழு விவரம், உற்பத்தி யாளரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை இருக்க வேண்டும்.

**விதிமுறைகளை பின்பற்றாமல்**

விதைகளை பாக்கெட்டில் விற்பனை செய்யும் நிறுவனங்கள் அதன் தரத்தினை ஒவ்வொரு பாக்கெட்டிலும் அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டும். குழித்தட்டுகளில் விற்பனை செய்யப்படும் காய்கறி பயிர்களின் நாற்றுக்களின் தரம், ஆதாரத்தை உறுதி செய்ய அந்த குழித்தட்டுகளில் அந்த ரகங்களின் விதை குறித்த அனைத்து முக்கிய தகவல்களையும் உள்ளடக்கிய உண்மை தன்மை அட்டையில் நாற்றங்கால் உரிமையாளரின் கையொப் பத்துடன் முத்திரை எண், பயிரின் பெயர், விதை உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர், ரகத்தின் பெயர், விதைத்த நாள், குவியல் எண், நாற்றங்காலின் பெயர் மற்றும் முழு விவரம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு நாற்றுக்களை விற்பனை செய்யும்போது பயிர், ரகம், நாற்றுகளின் எண்ணிக்கை, விற்பனை விலை ஆகிய விபரங்களுடன் விவசாயிகளின் கையொப்பத்துடன் ரசீது வழங்க வேண்டும். பழச்செடிகள், தென்னங்கன்றுகள், காய்கறி நாற்றுகள் விற்பனை செய்யும்போது அவற்றின் ரகம், விலை குறிப்பிட்டு ரசீது வழங்கி இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். நர்சரி முன்பு அவற்றின் பெயர் பலகை, நாற்றுகள் இருப்பு மற்றும் விலைப்பட்டியல் அடங்கிய இருப்பு பலகை வைத்து பராமரிக்க வேண்டும். அரசின் விதிமுறைகளை பின் பற்றாமல் செயல்படும் நர்சரி உரிமையாளர்கள் மீது விதைச் சட்டம் மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலை அதிகாரிகளுக்கு ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் உற்பத்தி பயிற்சி



கோயம்புத்தூர், அக்.21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிர் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சி யியல் துறையில், தோட்டக் கலை அதிகாரிகளுக்கு ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த ஒரு நாள் பயிற்சி 18.10.24 அன்று வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறையில் உயிரியல் முறை பூச்சி கட்டுப்பாடு என்பது ஒரு வகையான பூச்சி கட்டுப்பாடு முறையாகும். அதாவது பயிர்களை தாக்கக்கூடிய பூச்சிகளை இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணி மற்றும் இரை விழுங்கியை பயன்படுத்தி கட்டுப்படுத்துவதாகும். தீங்கு விளை விக்ககூடிய பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டை டகுறைப்பதற்காக நன்மை செய்யும் பூச்சிகளை பயன்படுத்தி பயிர்களை சேதத்தில் இருந்து பாதுகாக்கலாம்.

குறிப்பாக, தென்னையை தாக்கக்கூடிய பூச்சிகளுக்கான இயற்கை எதிரிகள் மற்றும் மரவள்ளி மாவுப்பூச்சிக்கான ஒட்டுண்ணி குறித்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்த தோட்டக்கலை அதிகாரிகளுக்கு, பூச்சியியல் துறை பேரா சிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா.முருகன் இப்பயிற்சியினை துவக்கி வைத்தார். பயிர்களை தாக்கக்கூடிய பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் மற்றும் அதனை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து பூச்சியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஞா.ப்ரீதா, விளக்கமளித்தார். இதனைத் தொடர்ந்து இயற்கை எதிரிகளை வளர்க்க பயன்படுத்தப்படும் நெல் அந்துப்பூச்சியின் உற்பத்தி குறித்து பூச்சியியல் துறை பேராசிரியர், முனைவர். ஏ.சு.ஜான்சன் தங்கராஜ் எட்வர்ட் விளக்கமளித்து நெல் அந்துப்பூச்சி பெருக்கம் செய்யும் ஆய்வகத்தையும் பார்வையிட்டனர். பின்னர் பூச்சியியல் துறையின் ஒட்டுண்ணி உற்பத்தி ஆய்வகத்தில் தென்னையை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடிய ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்யும் செயல்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் இரை விழுங்கிகளின் உற்பத்தி முறைகளை பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் மு.அழகர் விளக்கமளித்து செய்முறை பயிற்சியும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பெ.அ.சரவணன், மரவள்ளியை தாக்கும் மாவுப்பூச்சி மற்றும் அதனை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி உற்பத்தி குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியின் முடிவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், பயிர்ப்பாதுகாப்பு இயக்கத்தின் இயக்குனர் முனைவர் மூ.சாந்தி கலந்துக் கொண்டு தோட்டக்கலை அதிகாரிகளுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கினர். இப்பயிற்சியில் 25 தோட்டக்கலை அதிகாரிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# தெத்துவாசல்பட்டி கிராமத்தில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி பயிற்சி



புதுக்கோட்டை, அக்.21

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி பயிற்சி தெத்துவாசல்பட்டி கிராமத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி செந்தில்குமார் மற்றும் விக்னேஷ், வேளாண்மை அலுவலர் முன்னிலையில் பயிற்சி நடைபெற்றது.

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி செந்தில்குமார், கரும்பு அலுவலர்கள் இந்திரசித், காசிராஜன் மற்றும் மேலவாசல், கரும்பு பெருக்கு அலுவலர்கள், கரும்பு ஆய்வாளர்கள், உதவி வேளாண்மை அலுவலர் செல்வன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் சொட்டுநீர் பாசன உதவியாளர் வரதராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை அலுவலர் விக்னேஷ் அனைவரையும் வரவேற்று பேசுகையில் வட்டாரத்தில் செயல் படுத்தப்படும் முக்கிய திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் உழவன் செயலி, பி.எம்.கிசான் திட்டம், உழவர் கடன் அட்டை, தமிழ் மண்வளம் இணையதள மூலமாக மண்வள அட்டை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி செந்தில்குமார், கரும்பு விவசாயிகளை ஊக்கப்படுத்தி அதிக அளவில் கரும்பு சாகுபடி செய்திடவும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை செயல்பாடுகள் குறித்தும், கரும்பு சாகுபடியின் முக்கியத்துவம் குறித்தும், கரும்பு சாகுபடி பரப்பளவை அதிகரிக்க வேண்டி யதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகள் குறித்தும் விளக்கி கூறினார்.

கரும்பு அலுவலர் காசிராஜன் புதிதாக அறிமுகமாகியுள்ள கரும்பு இரகங்கள் குறித்தும், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்களான ஒருபரு விதை மூலம் குழித்தட்டு முறையில் நாற்றங்கால் தயாரித்தல், குறைந்த செலவில் விதை கரணை, 5 முதல் 6 அடி இடைவெளியில் பார் அமைத்து நடவு செய்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். கரும்பு அலுவலர் மேலவாசல் கரும்பு பயிரை தாக்கும் பூச்சி நோய் பற்றியும், அவற்றை ஒருங் கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்தும் விளக்கிக் கூறினார்.

சொட்டுநீர் நிறுவனத்திலிருந்து வருகை புரிந்த வரதராஜ் கரும்பு சாகுபடியில் சொட்டுநீர் பாசன கருவிகள் அமைப்பதற்கு அரசால் வழங்கப்படும் சலுகைகள் குறித்தும் அவற்றை பயன் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் சொட்டுநீர் பாசன கருவிகளை பராமரிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

கந்தர்வகோட்டை வட்டார உதவி வேளாண்மை அலுவலர் செல்வன் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் கலந்துகொண்ட 40 கரும்பு சாகுபடி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

நெற்பயிரை 100-க்கும் மேற்பட்ட பூச்சி இனங்கள் பல்வேறு வழிகளில் தாக்குகின்றன. சாறு உறிஞ்சும் பூச்சிகள், துளைப் பான்கள் மற்றும் இலை உண்ணும் புழுக்கள் நெற்பயிரைத் தாக்கிப் பெருத்தப் பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்துகின்றன.




கீழ்க்கண்டவாறு ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தை மேற்கொள்ளும் போது மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

- உள்ளங்கையை தண்ணீரில் நனைத்து பின் நாற்றாங்காலில் 12 இடங்களில் பயிர்களின் மேல் கையைக் கொண்டு செல்ல வேண்டும். 12 முறைகளில் இலை பேனின் எண்ணிக்கை 60-ஐ கடந்து விட்டால் தயாமீத்தாக்ஸம் 25 சதவிகிதம் நனையும் குருணை 100 கிராம் /எக்டர் தெளிக்க வேண்டும்.
- தெருவிளக்கிற்கு அருகில் நாற்றாங்கால் அமைக்கக்கூடாது.
- நாற்றுக்களைப் பரிந்துரைக்கப்பட்ட இடை வெளியில் நடவு செய்ய வேண்டும்.
- தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களைப் பயன் படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும்.
- தேவைக்கு அதிகமாகத் தண்ணீர்ப் பாய்ச்சுவதைத் தவிர்க்கவும்.
- ஓர் ஏக்கருக்கு 6 லிட்டர் என்ற அளவில் மண்ணெண்ணெய் பயன்படுத்திக் கூண்டுப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். தூர்களிலிருக்கும் புழுக்களைக் கீழே விழச் செய்ய இளம்பயிர்களின் குறுக்கே கயிறைப்போட்டு இழுத்தால் கூண்டுகள் நீரில் விழுந்து விடும்.
- இலை மடக்குப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த டிரைக்கோ கிரெம்மா கிலொனிஸ் முட்டை ஒட்டுண்ணிகளை பயிர் நடவு செய்து 37,44 மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை 5 சிசி (1 லட்சம் முட்டை ஒட்டுண்ணிகள் எக்டர்/முறை) என்ற அளவில் விட வேண்டும்.
- நடுவதற்கு முன் நாற்றுக்களின் நுனியைக் கிள்ளி குருத்துப் பூச்சி முட்டைக் குவியல் களை அழிக்க வேண்டும்.
- விளக்கு பொறி அமைத்துப் புகையானை கவர்ந்து அழிக்கலாம். அதிகாலை நேரத்தில் விளக்குப் பொறியைச் சுற்றிப் பூச்சிக்கொல்லி தெளித்தோ அல்லது தூவியோ கவரப்பட்ட புகையான் அல்லது பச்சைத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.
- வேப்பெண்ணெய் 3 சதவிகிதம் @ 15 லிட்டர்/எக்டர் அல்லது இலுப்பை எண்ணெய் 6 சதவிகிதம் @ 30 லிட்டர்/எக்டர் அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிகிதம் @ 25 கிலோ/எக்டர் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.
- அறுவடை செய்த பின் தாள்களை மடக்கி உழுதல் மூலம் புழுக்களையும், கூட்டுப்புழுக்களையும் அழிக்கலாம்.

- கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 4 சதவிகிதம் 18.75-25.0 கிலோ/எக்டர்
- பைப்ரினில் 5 சதவிகிதம் SC 1000-1500 மிலி/எக்டர்
- தையமித்தாக்சம் 25 சதவிகிதம் WG 100 கிராம்/எக்டர்

மேற்காணும் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியைத் தெளித்துப் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.

